மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இல்லை.

* 471 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரத்திலிருந்து திருச்சி, மதுரை வழியாக திருநெல்வேலிக்கு பகலில் செல்லும் துரித வண்டி விட ஆவன செய்ய ஏதேனும் திட்டம் அரசின் பரிசிலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இல்லை.

திரு. எம். தேவராசன் : நீண்டதூர எக்ஸ்பிரஸ் பஸ்களில் புகார்ப் புத்தகங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. புகார்கள் குறைந்திருக்கின்றனவா ? அதிகமாகி இருக்கின்றனவா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : புகார்களைப் பொறுத்தவரை இப்போது குறைந்து வருகின்றன. ஏற்கனவே வாரத்திற்கு ஏழு, எட்டு என்று வந்தது இப்போது வாரத்திற்கு இரண்டு என்ற அளவிலேதான் வருகிறது.

திரு. எம். சுரேந்திரன் : புகார்ப் புத்தகத்தில் எழுதுகின்றவர்கள் எண்ணிக்கை குறைந்து வருகிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். புகார்கள் புத்தகத்தில் எழுதப்படுவது குறைகிறது என்ற காரணத்தால் வண்டியில் இருக்கும் கோளாறுகள் குறைந்திருக்கின்றன என்று அமைச்சர் அவர்கள் கருதுகிறார்களா ? சமீபத்தில் நான் நீண்ட தூர பஸ்ஸில் சேலத்திற்குச் சென்றபோது வழியில் திண்டிவனத்தில் அந்த பஸ் நின்று விட்டது. வெகு நேரம் கழித்து ஒரு ஓட்டை வண்டி வந்து எங்களை ஏற்றிச் சென்றது. அதிலே ஜன்னல் திரை கிடையாது, ஜில்லென்ற காற்று, தூசி இவற்றுடன் சேலம் போய்ச் சேர்ந்தோம். புகார்ப் புத்தகத்தில் எழுதுவதற்கு பொதுவாக தயக்கம் காட்டுகிறார்கள். ஆகவே, இந்தமாதிரிக் கோளாறுகளைப் போக்க அமைச்சர் அவர்கள் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தை அறிந்திருக்கிறேன். ஆனால் அவர்கள் தெரிவித்ததைப்போல் வண்டிகள் அடிக்கடி நின்று விடுகின்றன என்று சொல்லுவது முறையாகாது. கிட்டத்தட்ட 200 வண்டிகள் ஒரு நாளைக்கு ஓடுகின்றன. சாதாரணமாக ஒரு வாரத்திற்கு 12 பிரேக் டவுன் ஆகிறது. ஒரு நாளைக்கு அதிக பட்சம் 2 என்ற முறையில்தான் ஆகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புகார்ப் புத்தகத்தைப் பயன்படுத்தாமல் இன்றையதினம் நேரிலே புகாரைத் தெரிவித்ததற்காக நன்றி. அதைப்பற்றி மேற்கொண்டு நடவடிக்கைகளை நல்ல

முறையில் செய்வதற்கான மேம்பாட்டுத் திட்டங்களை அரசு போக்குவரத்துத் துறை மேற்கொண்டு வருகிறது என்பதையும் அவர்கள் நன்றாக அறிவார்கள். இருந்தாலும் இப்போது புதிய வண்டிகளில் கூட 'அன்போர்ஸீன் சர்கம்ஸ் டன்ஸஸ்'—என்று சொல்லக்கூடிய வகையில் எதிர்பாராமல் வண்டிகள் நின்று விடுகின்ற காட்சியைப் பார்க்கிறோம். புதிய கார்கள் கூட சமயத்தில் நின்று விடுகின்றன என்பது உறுப்பினர் அவர்கள் அறிந்த ஒன்றுதான்.

திரு. ஜே. ஜேம்ஸ்: இப்போது ரிடையர்டு டிரைவர்ஸ், கண்டக்டர்ஸ மறுபடியும் நியமிக்கப்படுகிறார்களா? அப்படி என்றால் தகுதி பெற்ற இளைஞர்களும், கண்டக்டர்களும் இல்லையா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பொதுவாக தகுதி பெற்ற டிரைவர்கள் இப்போது குறைவாகத்தான் இருக்கிறார்கள். சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரை டிரைவர்கள் தேவைப்படுகின்ற அளவுக்கு இல்லை. வெளி மாவட்டங்களில் டிரைவர்கள் கிடைக்கிறார்கள். சென்னை மாநகரத்தில் கிடைக்கவில்லை. ஆகையால் நல்ல சர்விஸ் ரெக்கார்டு உள்ள டிரைவர்கள் உடல் நலமுள்ளவர்களாக இருப்பார்களானால் அவர்களை மேலும் வேலையில் வைக்க இந்த அரசு அதை ஒரு ஊக்கமாக, அந்த முறையைக் கையாள உத்தேசித்துள்ளது.

திரு. கே. எ. வகாப்: இப்போது தனியார் பஸ்களை அரசே ஏற்றுக் கொண்ட காரணத்தால் அதிலே வேலை செய்த டிரைவர்களும், கண்டக்டர் களும் வேலை வாய்ப்பு இழந்து போகும் சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கிறது. அப்படிப்பட்டவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: அப்படி தனியார் துறையில் பணியாற்றியவர்களுக்கு முன் உரிமை வழங்கப்படும்.

திரு. எஸ். வடிவேல்: நம்முடைய அரசாங்க பஸ்கள் எங்கேயாவது பழுதடைந்து நின்று விட்டால் டிக்கட் ரிஃபண்ட் கொடுக்க சாத்தியக் கூறுகள் உண்டா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பயணிகளுக்கு டிக்கட் ரிஃபண்ட் கொடுக்க வேண்டுமென்ற முறையில் அரசாங்கம் ஆலோசனை கூறியிருக்கிறது.

திரு. நா. வீராசாமி: இப்போது எல்லாத் துறைகளிலும் நாம் வேகமாக முன்னேறிக்கொண்டு வருகிறோம். ஆனால் எக்ஸ்பிரஸ் பஸ் வேகம் பழைய வேகத்திலேயே இருக்கிறது. எக்ஸ்பிரஸ் ரயில் வேகத்தை எல்லாம் அதிக மாக்கப் போகிறோம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்படி எக்ஸ்பிரஸ் பஸ்களின் வேகத்தையும் அதிகரிக்க செயற்குறிப்பு இருக்கிறதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பஸ்களின் வேகத்தை அதிகரிப்பது சாலைகளின் அமைப்பைப் பொறுத்திருக்கிறது. பொதுவாக, தேசிய நெடுஞ் சாலைகளில் செல்லுகின்ற பஸ்களின் வேகத்தை அதிகரித்திருக்கிறோம். எந்த அளவுக்கு அதிகரித்திருக்கிறோம் என்றால் மின்னல் வேகத்தில் இங்கிருந்து நாகர்கோயிலுக்கு பஸ் விடுகிறோம். அந்த அளவுக்குப் பயணிகள் செல்லு கின்ற நேரம் குறைந்திருக்கிறது. ஆனால் தொழிலாளர்களுக்குத்தான் ஓவர் டைம் கிடைப்பதில்லை.

திரு. எம். தேவராசன் : தலைவரவர்களே, நீண்டதூரம் துரித பஸ்களில் பிரயாணம் செய்கின்ற பிரயாணிகள் சோர்வின்றி இருக்க, நல்ல இசைத் தட்டுகள் வைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இசைத் தட்டுகள் பிரயாணிகளின் சோர்வை நீக்கலாம். ஆனால் இந்த இசையிலே டிரைவர் கவனம் செலுத்தினால், இசைத் தட்டுகள் அந்த பிரயாணிகளின் உயிரையும் போக்கலாம்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, நெடுந்தூரம் செல்கின்ற எக்ஸ்பிரஸ் பஸ்களில் உள்ள சீட்டுகள் நல்லமுறையில் இல்லை. இந்தக் குறை நீண்ட நாட்களாகச் சொல்லப்பட்டும் நிவர்த்திக்கப்படவில்லை. இதைப் பரிசீலிக்க அமைச்சரவர்கள் சென்னையிலிருந்து, நாகர்கோவில் வரையில் பிரயாணம் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இருக்கைகள் நல்ல முறையில் இருப்பதற்கு போக்குவரத்துத்துறை மேற்கொண்டு நடவடிக்கை எடுத்து வருகின்றது. அதற்கான குஷன் நமக்கு கிடைக்கவில்லை. நாம் அதற்கான ஆர்டர் கொடுத்தும், சென்ற யுத்தத்தின் காரணமாக நமக்கு இன்னும் குஷன்கள் கிடைக்கவில்லை. கிடைத்தவுடன் குஷன்கள் பொருத்தப் பட்டு, நல்ல இருக்கைகள் அமைக்கப்படும். நான் பஸ்ஸில் பிரயாணம் செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். நான் அமைச்சராவதற்கு முன்னாலேயே எல்லா பஸ்களிலேயும் சென்றிருக்கிறேன். ஆனால் ஒருநாள் கூட மாண்புமிகு உறுப்பினர் ஜேம்ஸ் அவர்களைப் பார்த்ததில்லை.

பெத்தசெட்டிபுரம் அரிசனங்களுக்கு நிலப்பட்டா

*** 457 வினா—திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், திருப்பூர் நகரில் பெத்தசெட்டிபுரம் அரிசன மக்கள் வாழும் பகுதியில் 1967 அல்லது 1968-ல் பட்டா ஏதேனும் கொடுக்கப் பட்டுள்ளதா ?